# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

**20 ஏப்ரல் - 31 மே, 2015**



முள்ளிவாய்க்காலில் 2015 மே 18 அன்று நடைபெற்ற தமிழ் நினைவுதினமொன்றில் மதகுருவொருவரை பொலிசார் விசாரிக்கின்றனர் (Photo – Seb BW)

INFORM Human Rights Documentation Centre

www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள பிரச்னைகள்:

### அ. கருத்துச் சுதந்திரம்

### ஆ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

### இ. நினைவுகூருவதற்கான உரிமை

### ஈ. மாணவர் செயற்பாட்டாளர்களின் அடக்குமுறை

### உ. எதிர்தரப்பு அரசியல் கட்சிகளின் அடக்குமுறை

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

சா

**ராம்சம்**

ராஜபக்ஷவின் ஜனாதிபதி ஆட்சியின் கீழிருந்ததை விட அதிகளவு சுதந்திரத்தைக் கொண்டுள்ளதாக ஒரு பொதுவான உணர்வு இருந்த போதிலும், சிறிசேனவின் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை தொடர்பான சம்பவங்கள் தொடர்ந்துமே அறிக்கையிடப்பட்டன.

2015 மே மாதத்தில், யுத்தத்தின் போது கொல்லப்பட்ட தமிழர்களுக்கான நினைவுதின நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்கு நீதிமன்றக் கட்டளைகளைப் பொலிசார் பெற்றனர். சில நிகழ்ச்சிகளில் ஒழுங்கமைப்பாளர்களையும், பங்கெடுப்பாளர்களையும் மற்றும் ஊடகங்களையும் பொலிசார் விசாரித்ததுடன், நிகழ்ச்சிக்கான இடத்தை மாற்றுமாறு ஒழுங்கமைப்பாளர்களை நிர்ப்பந்தித்ததுடன், கடுமையான கண்காணிப்பினை நினைவுதின நிகழ்ச்சிகளுக்கு உட்படுத்தியிருந்தனர். இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு மக்களை ஏற்றிஇறக்க வேண்டாமென பஸ் உரிமையாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். மே மாதத்தின் ஆரம்பத்தில், 2014 நொவம்பரில் எல்.ரி.ரி.ஈ.ஐ நினைவுகூருவதற்காக விளக்குகளை ஒளியேற்றியதாக சார்த்துரையொன்று தொடர்பில் விசாரிப்பதற்காக பொலிசாரினால் வட மாகாண சபை உறுப்பினர் ஒருவர் வரவழைக்கப்பட்டார்.

இதழியலாளர்கள் கைது செய்யப்பட்டு, விசாரணைக்காக வரவழைக்கப்பட்டனர். உள்ளூர் அரசியல்வாதியொருவரினால் தாக்கப்பட்டனர். அத்துடன் நீர் மாசுபடுத்தல் தொடர்பில் கூட்டமொன்றின் செய்தி சேகரிப்பிலிருந்து தடுக்கப்பட்டனர். கொழும்பில் மே தினப் பேரணியொன்றின் போது இரு கல்விமான்கள் தாக்கப்பட்டதுடன், இலங்கையில் யுத்தம் தொடர்பான பிரச்சனை மீது விருது வெற்றியீட்டிய மனித உரிமைகள் காப்பாளரும், நூற்கல்வியாளருமான ஒருவரினாலான நூலொன்றையிட்டு கலந்துரையாடலொன்றுக்கு அனுமதியை வழங்க யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் மறுத்திருந்தார்.

இரு இடங்களில் போராட்டக்காரர்களைக் கலைந்து போகச்செய்வதற்காக பொலிசார் கண்ணீர் புகைக்குண்டைப் பாவித்ததுடன், நீரையும் பீச்சியடித்தனர். யாழ்ப்பாணத்தில், பதின்மவயது பாடசாலைச் சிறுமி ஒருவரின் பாலியல்வல்லுறவுக்கும், கொலைக்கும் எதிரான போராட்டங்கள் மூர்க்கத்தனமானதால், நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களின் பெரும்பாலானோர் வன்முறையில் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என உள்ளூர் செயற்பாட்டாளர்கள் INFORMக்கு கூறியிருந்தனர். இச் சம்பவம் தொடர்பில் போராட்டங்களைத் தடைசெய்யும் ஆகக்குறைந்தது இரு நீதிமன்றக் கட்டளைகளைப் பொலிசார் பெற்றனர். அமைதியான முறையில் போராட்டம் நடத்தியதும், பொலிசாருடன் கலந்தாய்வொன்றில் ஈடுபடுவதற்கு முயற்சித்ததுமான வயது முதிர்ந்த பெண் ஒருவருக்கு எதிராக ஒரு சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் தூஷணையான மொழியைப் பயன்படுத்தினார். சம்பவத்தை 'வீடியா' படம்பிடித்த நபர் ஒருவரை அதே அலுவலர் அச்சுறுத்தியுள்ளார். சில பகுதிகளுக்கு மட்டும் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும் என பிரதி நீதி அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களினாலான போராட்டமொன்றுக்காக ஒலிபெருக்கியொன்றை ஏற்றியிறக்கிய முச்சக்கர வண்டியொன்றின் சாரதி கைது செய்யப்பட்டதுடன், போராட்டமொன்றில் சம்பந்தப்பட்டிருந்த இரு பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இலஞ்சத்தினதும் அல்லது ஊழலினதும் சார்த்துரைகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவுக்கு வெளியே போராட்டமொன்றில் ஈடுபட்டதற்காக முன்னைய ஜனாதிபதியுடன் இணைந்திருந்த 27 அரசியல்வாதிகள் மீது நீதவான் ஒருவர் அழைப்பாணை வழங்கியிருந்தார்.

## அ. கருத்துச் சுதந்திரம்

### 1. இதழியலாளர்கள் தொந்தரவு செய்யப்பட்ட மூன்று சம்பவங்கள்

இதழியலாளர்கள் தொந்தரவு செய்யப்பட்டு, அறிக்கையிடுவதிலிருந்து அவர்கள் தடுக்கப்பட்ட மூன்று சம்பவங்களையிட்டு பத்திரிகை வெளியீடொன்றில் இலங்கைச் சுதந்திர ஊடக இயக்கம் குறிப்பிட்டிருந்தது.

- பொத்தல, போப்பே (காலி மாவட்டம்) உள்ளூராட்சி சபையில் நடைபெற்ற மகப்பேறு சிகிச்சை நிலையமொன்றின் குறைபாடுகளை இட்டு அறிக்கை சேகரிக்கச் சென்ற ஐ.ரி.என். தொலைக்காட்சி நிருபர் ஒருவர் சபையின் உப தலைவரினால் தாக்கப்பட்டு, அவரது பணியைச் செய்வதிலிருந்தும் தடுக்கப்பட்டார்.
- யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள சுன்னாகத்தில் நீர் மாசுபடுத்தலையிட்டு கலந்துரையாடல் நடைபெற்ற கூட்டமொன்றில் செய்தி சேகரிப்பதிலிருந்து இதழியலாளர்கள் தடுக்கப்பட்டனர்.
- சுவர்ணவாஹினி தொலைக்காட்சியின் இதழியலாளர் ஒருவர் வேலையிலிருந்து வீட்டுக்கு செல்லும் வேளை, தனது மோட்டார் சைக்கிளை ஓட்டும் போது மோட்டார் சைக்கிள் நிறுத்துவதற்கான சமிக்ஞையை உதாசீனம் செய்ததாகக் கூறி அவரைப் பொலிஸ்காரர் ஒருவர் தாக்கினார் (INFORMஇனால் குறிப்பு - இது தனது பணியின் போது இதழியலாளர் ஒருவருக்கு ஏற்பட்ட சம்பவம் தொடர்பிலானதா என்பதையிட்டு தெளிவில்லை).

http://srilankabrief.org/2015/05/violence-against-dissents-should-be-punished-fmm/

### 2. விசாரணைக்காக நான்கு தமிழ் இதழியலாளர்கள் வரவழைக்கப்பட்டனர்

மன்னார் மற்றும் வவுனியா ஆகிய வடக்கு நகரங்களைத் தளமாகக் கொண்ட நான்கு தமிழ் இதழியலாளர்கள் ஏப்ரல் 28 அன்று கொழும்பில் பொலிசாரினால் விசாரிக்கப்படுவதற்காக வரவழைக்கப்பட்டனர். அவர்கள் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அந்தோனி தேவராஜன் மார்க், ஐ.ரி.என்.ஐச் சேர்ந்த ஜூட் பெலிஸ்ரிஸ், சுதந்திரமாக இயங்கும் ஊடகவியலாளர் லம்பேர்ட் றொஸைரோ மற்றும் பீ.பீ.சி. மற்றும் தமிழ்த் தினசரியான “வீரகேசரி” ஆகியவற்றுக்காகப் பணிபுரியும் பொன்னையா மாணிக்கவாசகம் ஆகியோருவர்.



பொன்னையா மாணிக்கவாசகம் (photo: internet)

http://en.rsf.org/sri-lanka-concern-over-police-harassment-of-29-04-2015,47830.html (Last accessed on 2nd June 2015)

2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலின் முன்னர் PAFFRELஇன் (ஒரு முன்னணிவாய்ந்த தேர்தல் கண்காணிப்பு உறுப்பு) நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு விடுக்கப்பட்ட அனாமதேய அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்பொன்று தொடர்பிலேயே இதழியலாளர்கள் விசாரிக்கப்பட்டார்கள். அதே தினத்தன்று அதே அழைப்பாளர் நான்கு இதழியலாளர்களுக்கும் அழைப்புக்களை விடுத்துள்ளதுடன், இதழியலாளர்களும் அச்சுறுத்தப்பட்டனரா என அறிவதற்கு கொழும்பு குற்றப் பிரிவு விரும்பியது. விசாரணையில் உள்ள காலத்தின் போது, தமக்கு அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்புக்கள் கிட்டவில்லை எனவும், தமக்கு கிட்டுகின்ற சகல அழைப்புக்களையும் இட்டு தாம் பதிவுகளை வைத்திருப்பதில்லை எனவும் அவர்கள் கொழும்பு குற்றப் பிரிவுக்கு கூறியுள்ளனர்.
http://mirror.lk/news/item/3681-tamil-journalists-quizzed-for-4-hrs (Last accessed on 2nd June 2015)
(INFORMஇனால் குறிப்பு - இது தனது பணியின் போது இதழியலாளர் ஒருவருக்கு ஏற்பட்ட சம்பவம் தொடர்பிலானதா என்பதையிட்டு தெளிவில்லை).

### 3. யாழ்ப்பாணத்தில் தமிழ் இதழியலாளர் விசாரிக்கப்பட்டார்

ஏப்ரல் 26 அன்று இதழியலாளர் ஜேம்ஸ் ஜோசப் பெர்னாண்டோ பொலிசாரினால் வரவழைக்கப்பட்டு, வடக்கில் மீள்குடியேற்றக் கொள்கையின் அங்கமாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விமர்சித்து "வீரகேசரி" என்ற தமிழ் பத்திரிகையில் 2009இல் வெளியிடப்பட்ட கட்டுரைகளைப் பற்றி விசாரிக்கப்பட்டார். அப்போதைய மீள்குடியேற்ற அமைச்சர் தற்போதைய அரசாங்கத்தின் வர்த்தக, கைத்தொழில் அமைச்சராக விளங்குகின்றார்.
http://en.rsf.org/sri-lanka-concern-over-police-harassment-of-29-04-2015,47830.html (Last accessed on 2nd June 2015)

### 4. யாழ்ப்பாணத்தில் இதழியலாளரும், இரு மாணவர்களும் தடுத்து வைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணத்தில் 23ஆம் திகதி காலையில் ஓர் உள்ளூர் இதழியலாளரும் மற்றும் இரு பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட மூன்று நபர்களும் கைது செய்யப்பட்டனர். தடுத்துவைத்திருந்தவர்கள் தங்கியிருந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள வீடொன்றுக்கு பொலிஸ் வாகனங்களில் சிவிலியன் உடைகளை அணிந்திருந்த இலங்கை பொலிஸ் அலுவலர்கள் வந்திறங்கினர். காரணங்களை பொலிஸார் வெளிப்படுத்தாததினால், கைதிற்கான ஏதேனும் காரணத்தை செய்தியை உள்ளடக்கிய ஊடகங்கள் வழங்கவில்லை. அவர்கள் ஏப்ரல் 27 வரை தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.
http://tamilguardian.com/article.asp?articleid=14533

### 5. கொல்லப்பட்ட எல்.ரி.ரி.ஈ. தொலைக்காட்சி இதழியலாளர் மீதான திரைப்படம் தடைசெய்யப்பட்டது

2009இல் சிவில் யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் இலங்கையின் ஆயுதப்படைகளினால் சிறைபிடிக்கப்பட்ட போது, கொல்லப்பட்டதாகக் கூறப்படும் தொலைக்காட்சி இதழியலாளரான இசைப்பிரியாவின் உண்மையான வாழ்க்கைக் கதையொன்றின் மீதான அடிப்படையிலான "போர்க்களத்தில் ஒரு பூ" என்ற திரைப்படத்திற்கு சான்றிதழ் வழங்குவதற்கு மத்திய திரைப்பட தணிக்கைச் சபை "வெளிநாட்டு நாடுகளுடனான நட்புறவிலான உறவுகளைத் திரைப்படம் கறைபடுத்தும் என்ற காரணத்தின் மீது மறுத்துள்ளது. திரைப்படக்கலைச் சட்டத்தையே சபை வெறுமனே பின்பற்றியது" எனக் கூறி தீர்மானத்தையிட்டு சபையின் பிராந்தியத் தலைவர் எஸ்.வி.சேகர் ஆதரித்தார்.
http://www.thehindu.com/news/cities/chennai/film-on-slain-lankan-tv-journalist-banned/article7245848.eceVv (Last accessed on 2nd June 2015)

### 6. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் யுத்தத்தின் முடிவு தொடர்பிலான நூலொன்றின் கலந்துரையாடலுக்கு தடை

2015 ஏப்ரல் 24 அன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் (யா.ப.வி.ஆ.ச.) நூலக கேட்போர்கூடத்தில் அதன் உறுப்பினரான ராஜன் ஹூலினால் எழுதப்பட்ட "முறிந்த பனை" என்ற நூலின் கலந்துரையாடலொன்றை ஒழுங்குசெய்திருந்தது. சில சிரேஷ்ட நூற்கல்வியாளர்களின் ஆதரவுடன் உப வேந்தர் கலந்துரையாடலைத் தடைசெய்ய முயன்றார். ஆனால், திட்டமிடப்பட்ட கலந்துரையாடலை (யா.ப.வி.ஆ.ச.) நடத்தியது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றினால் தடைகோரப்பட்டதாகவும், தன்னால் தீர்மானம் எடுக்கப்படவில்லையெனவும் ஆனால் பீடாதிபதிகளின் குழுவினாலேயே எடுக்கப்பட்டதெனவும் பீ.பீ.சி. தமிழ் சேவைக்கு உப வேந்தர் கூறினார்.
http://oneislandtwonationsblogspotcom.typepad.com/blog/2015/05/banning-historical-memory-questions-of-politics-quality-academic-freedom-in-jaffna.html

**7. அரசியல் பேரணியொன்றில் இரு நூற்கல்வியாளர்கள் தாக்கப்பட்டனர்**



கலாநிதி தேவசிறி மற்றும் கலாநிதி குசும் குமார (Photo: Internet)

மே 1 அன்று கிருலப்பனையில் முன்னாள் FUTAஇன் தலைவரும், தற்போதைய ஊடகப் பேச்சாளருமான கலாநிதி நிர்மல் ரஞ்ஜித் மற்றும் முன்னணிவாய்ந்த பொதுசன புத்திமான் கலாநிதி குமுது குசும் குமார ஆகியோர் குழுவொன்றினால் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார மற்றும் தினேஷ் குணவர்தன ஆகியோரினால் ஒழுங்குசெய்யப்பட்ட மே தினப் பேரணிக்கு அருகில் கலாநிதி தேவசிறியும், கலாநிதி குசும் குமாரவும் நின்றிருந்தனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்கு கலாநிதி தேவசிறியும், கலாநிதி குசும் குமாரவும் பொறுப்பானவர்கள் எனத் தாக்குதல் நடத்தியோர் கத்தியுள்ளனர். உயிருடன் கலாநிதி தேவசிறியும், கலாநிதி குசும் குமாரவும் தப்புவதற்கு பேரணிக்கு பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்த பொலிசாரின் உடனடி நடவடிக்கைக்கு நன்றி கூறப்படுகின்றது. அவ்விடத்திலிருந்து இரு கல்விமான்களையும் கொண்டு சென்ற பொலிஸ் வாகனத்தை தாக்குவதற்கும் கோஷ்டி முயன்றுள்ளது.
http://srilankabrief.org/2015/05/the-futa-statement-on-the-attack-on-dr-nirmal-ranjith-dewasiri-and-dr-kumudu-kusum-kumara/#more-23510 (Last accessed on 2nd June 2015)

## ஆ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்

**8. காணிப் பிரச்சனைகள் மீது போராட்டம் நடத்தியமைக்காக கிராமவாசிகள் அச்சுறுத்தப்பட்டனர்**

குடியிருப்பாளர்களுக்குச் சொந்தமான தனிப்பட்ட காணிகளைப் பறிமுதல் செய்வதாகக் குற்றஞ்சாட்டி பிராந்தியத்திற்கான அரசாங்கத்தின் பிரதேசச் செயலாளருக்கு எதிராக மே 13 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டானின் கிராமவாசிகள் போராட்டம் நடத்தினர். உள்ளூர் அரசாங்க அதிகாரிகளினால் காணியை மீளளிக்குமாறு கட்டளையிடப்பட்ட போதிலும், பிரதேசச் செயலாளர் அவ்வாறு செய்வதற்கு மறுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. பிரதேசச் செயலாளரின் அலுவலகத்திற்கு முன்னால் நடந்த போராட்டத்தின் போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அலுவலகத்திலிருந்து வெளியே வந்த அலுவலர்கள், அச்சுறுத்தியதாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.
http://www.tamilguardian.com/article.asp?articleid=14734 (Last accessed on 2nd June 2015)

**9. போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன**

செயற்பாட்டாளர்களினதும், தொழிலாளர்களினதும் மற்றும் பொது மக்களினதும் உரிமைகளைப் பாதுகாக்குமுகமாக, நாட்டில் அமைதியான போராட்டங்களை அனுமதிப்பதற்காக முன்னோக்கிச் செல்லும் நடவடிக்கையொன்றாக, குறிப்பான பகுதிகளுக்கு பொதுசனப் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என பிரதி நீதி அமைச்சர் சுஜீவா சேனாசிங்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார். சில வேளைகளில், இலங்கையில் பொது மக்களைக் குழப்பியும், பொதுசன அமைதியின்மையை விளைவித்தும் பொதுப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் சேனாசிங்க தெரிவித்தார். எனவே, பெருமளவு வேறு நாடுகளைப் போன்று, குறித்தொதுக்கப்பட்ட குறிப்பான பகுதிகளுக்கு போராட்டங்களைக் கட்டுப்படுத்துதவற்கு சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான அவசியமொன்று உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். அவரின் கூற்றுப்படி, இலங்கையில் பொதுசனப் போராட்டத்திற்கு குறித்தொதுக்கப்பட்ட இடங்கள் தற்போது இல்லை என்பதுடன், எனவே அத்தகைய பகுதிகளை அறிமுகப்படுத்துவதற்கும், அத்தகைய பகுதிகளுக்கு போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அவசியமொன்றுள்ளது.
http://www.thesundayleader.lk/2015/04/26/laws-sought-to-restrict-protests/ (Last accessed on 2nd June 2015)

**10. கொலைச் சந்தேகநபர்களை விடுவித்தமைக்கு எதிராகப் போராட்டக்காரர்களைக் கலைப்பதற்காக நீர் பீச்சியடிக்கப்பட்டதுடன், கண்ணீர் புகைக்குண்டும் பயன்படுத்தப்பட்டது**



போராட்டத்தில் பொலிசார் (Photo: Lankadeepa)

எம்பிலிப்பிட்டிய-இரத்தினபுரி வீதியை 28ஆம் திகதி மாலைவேளை கஹவத்தை, கொட்டகெதனவில் மறியல் செய்த போராட்டக்காரர்களைக் கலைந்து போகச்செய்வதற்காக பொலிசார் நீர் பீச்சியடித்ததுடன், கண்ணீர் புகைக்குண்டையும் பயன்படுத்தினர். எம்பிலிப்பிட்டிய-இரத்தினபுரி பிரதான வீதியில் போராட்டக்காரர்கள் மறியல்செய்ததுடன், பொலிஸ் அலுவலர்கள் மீது அவர்கள் கற்களை வீசியெறிந்ததினால் கண்ணீர் புகைக்குண்டைப் பாவித்ததாகவும், நீரைப் பீச்சியடிக்க வேண்டியிருந்ததாகவும் பொலிஸ் பேச்சாளரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். இரட்டைக் கொலை வழக்கொன்றில் சந்தேகநபர்களை விடுவித்தமை தொடர்பில் கரிசனையை போராட்டக்காரர்கள் வெளிப்படுத்தினர்.

http://www.dailynews.lk/?q=police-legal/water-cannon-tear-gas-used-disperse-kotakethana-protestors#sthash.fKjyX9LV.dpuf (Last accessed on 2nd June 2015)

## 11. குப்பை கொட்டுவதற்கு எதிரான போராட்டக்காரர்களைப் பொலிசார் கலைத்தனர்



போராட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிசார் நீரைப் பீச்சியடித்தனர் (Photo: Asian Mirror)

ஞாயிற்றுக்கிழமை மாலை வேளை, மீதோட்டமுல்ல குப்பை கொட்டுமிடத்திற்கு எதிராகப் போராட்டமொன்றைக் குடியிருப்பாளர்கள் நடத்தியதனால், அவிசாவளை-கொழும்பு பிரதான வீதி தடைபட்டது. பகுதியில் உள்ள 16 ஏக்கர் குப்பை கொட்டுமிடத்தை அகற்றுமாறு கோரி ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமவாசிகள் ரயர்களை எரிப்பதன் மூலம் வீதியைத் தடைசெய்ததாக பொலிஸ் பேச்சாளரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். வாகன சேவை நிலையத்திற்கு அருகில் ரயர்களை எரிப்பதன் மூலம், குழப்பமொன்றைப் போராட்டக்காரர்கள் உருவாக்கியதனால், அவர்களை கலைப்பதற்காக பொலிசார் நீரைப் பீச்சியடித்தனர். சம்பவத்தில் ஒரு போராட்டக்காரர் காயமடைந்ததுடன், அவர் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.
http://www.dailynews.lk/?q=police-legal/police-disperse-meethotamulla-protestors#sthash.0kFVtbit.dpuf (Last accessed on 2nd June 2015)

## 12. வயதுமுதிர்ந்த பெண் போராட்டக்காரரைச் சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் வாய்மொழியாக தூஷித்ததுடன், சம்பவத்தை 'வீடியோ' படம்பிடித்த நபர் ஒருவரை நிறுத்துமாறும் அச்சுறுத்தினார்

பதின்ம வயதான பாடசாலைச் சிறுமியொருவரின் பாலியல்வல்லுறவுக்கும், கொலைக்கும் எதிராக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போராட்டங்களின் போது, வயதுமுதிர்ந்த பெண் போராட்டக்காரர் ஒருவருடன்

பேசும் போது சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் ஒருவர் தூஷணையான மொழியைப் பயன்படுத்தியதுடன், சம்பவத்தை 'வீடியோ' படம்பிடித்த நபர் ஒருவரை நிறுத்துமாறும் அச்சுறுத்தினார். https://www.colombotelegraph.com/index.php/video-of-sinhala-police-officer-using-racially-motivated-language-at-an-elderly-jaffna-woman-goes-viral/ (Last accessed on 2nd June 2015)

**13. யாழ்ப்பாணத்தில் போராட்டங்கள் தடைசெய்யப்பட்டதுடன், போராட்டக்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டனர்**

அண்மையில் யாழ்ப்பாணம் நீதிமன்ற வளவுக்கு வெளியே போராட்டமொன்றின் போது வன்முறையை மக்கள் குழுவொன்று நாடிய பின்னர் யாழ்ப்பாணத்தில் வேறு போராட்டங்களைத் தடைசெய்யும் கட்டளையொன்றை மே 22 அன்று யாழ்ப்பாணம் நீதிமன்றம் விடுத்தது. ஜனதா பலய தாபனத்திற்கும், யாழ்ப்பாணம் பெண்கள் தாபனத்திற்கும் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனுக்கும் கட்டளை வழங்கப்பட்டது. வியாழக்கிழமையன்று சட்டவிரோதமாகக்கூடியமை மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி மீது கல்லெறிந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் மீது அண்ணளவாக 130 சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். நீதிமன்ற வளவின் அயல்புரத்தில் கூடியிருந்த போராட்டக்காரர்கள் யாழ்ப்பாணம், புங்குடுதீவில் 18 வயதான சிறுமியொருவரின் சார்த்துரைக்கப்பட்ட பாலியல்வல்லுறவு மற்றும் கொலை ஆகியன தொடர்பிலான பிரதான சந்தேக நபரை முன்னிலைப்படுத்துவதில் தாமதமொன்று இருந்த போது தமது கட்டுப்பாட்டினை இழந்தார்கள். http://www.colombopage.com/archive_15B/May26_1432652194CH.php (Last accessed on 2nd June 2015)

**14. சுன்னாகத்தில் போராட்டங்களை நீதிமன்றம் தடைசெய்தது**

மாணவியொருவரின் கூட்டு பாலியல்வல்லுறவு மற்றும் கொலை ஆகியன மீது யாழ்ப்பாணத்தின் அயல்புறமொன்றில் 14 நாட்களுக்கு போராட்டங்கள் மீது தடையொன்றை 26ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் உள்ள மல்லாகம் நீதிமன்றம் பிறப்பித்தது. சம்பவம் மீது மேலும் போராட்டங்களின் சாத்தியக்கூறு தொடர்பில் தகவல் கிட்டியதைத் தொடர்ந்து, மல்லாகம் நீதிமன்றத்திலிருந்து தடுத்து நிறுத்தல் உத்தரவொன்றைச் சுன்னாகம் பொலிஸ் வலியுறுத்தியதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். அண்மையில் 18 வயதான பாடசாலைச் சிறுமி ஒருவரின் கூட்டு பாலியல்வல்லுறவும், கொலையும் வடக்கில் பொதுப் போராட்டங்களைத் தூண்டியுள்ளன. http://www.colombopage.com/archive_15B/May26_1432652194CH.php (Last accessed on 2nd June 2015)

## இ. நினைவுகூருவதற்கான உரிமை

**15. யுத்தத்தில் மரணமடைந்த தமிழர்களை நினைவுகூர்ந்ததிற்காக இலங்கைப் பொலிசாரினால் வட மாகாண சபை உறுப்பினர் வரவழைக்கப்பட்டார்**

மாவீரர் தினமான 2014 நொவம்பர் 27 தனது வீட்டில் விளக்கை ஏற்றியமை தொடர்பில் விசாரிப்பதற்காக இலங்கைப் பொலிசாரினால் வட மாகாண சபை உறுப்பினர் ஒருவரான ரி.ரவிகரன் வரவழைக்கப்பட்டார். மே 4 அன்று அவரது வீட்டுக்கு வருகை தந்த இரு பொலிசாரினால் திரு.ரவிகரனுக்கு சிங்களத்தில் எழுதப்பட்ட பொலிஸ் அறிவித்தலொன்று வழங்கப்பட்டது. கொழும்பில் இருந்து அறிவித்தல் வந்ததாகவும், விசாரணைக்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு வட மாகாண சபை உறுப்பினர் வருகை தர வேண்டுமென கேட்கப்பட்டிருந்ததாகவும் ஊடக அறிக்கை தெரிவித்திருந்தது. http://www.tamilguardian.com/article.asp?articleid=14631(Last accessed on 2nd June 2015)

## 16. வடக்கிலும், கிழக்கிலும் யுத்தத்தில் இறந்தவர்களுக்கான நினைவுதின நிகழ்வுகளின் போது அச்சுறுத்தல், தொந்தரவுகள், கண்காணிப்பு



முள்ளிவாய்க்காலில் தேவாலயமொன்றில் நினைவுதினம் (Photo: Tamil Guardian)

யுத்தத்தின் போது கொல்லப்பட்டவர்களை நினைவுகூருவதற்காக மே 18 அன்று இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் ஒரு தொகையிலான நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டன. நிகழ்ச்சிகளுக்கு எதிரான கண்காணிப்பு, விசாரணை மற்றும் நீதிமன்றக் கட்டளைகள் மற்றும் வேறு வடிவங்களிலான தொந்தரவுகள் ஆகியவற்றின் பத்துக்கு மேற்பட்ட சம்பவங்கள் நேரடி சாட்சியாளர்களினாலும், ஊடகங்களினாலும், அனேகமாக சீருடையில் இருந்த பொலிசாரினாலும் மற்றும் சிவில் உடையில் இருந்த புலனாய்வு முகவர்களினாலும் அறிக்கையிடப்பட்டிருந்தன. கீழே சில உதாரணங்கள் உள்ளன:

- முள்ளிவாய்க்காலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நிகழ்ச்சிக்கு எதிராக நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டது.
- புறம்பான நிகழ்ச்சியொன்றை நடத்துவதிலிருந்து அவர்களைத் தடுப்பதற்கு பொலிசாரினால் சில பெண்கள் குழுக்களுக்கு இந்த நீதிமன்றக் கட்டளை காட்டப்பட்டது.
- மன்னாரில் நிகழ்ச்சியொன்றுக்கு எதிரான நீதிமன்றக் கட்டளையொன்றும் வழங்கப்பட்டது.
- மட்டக்களப்பில், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ச்சியொன்றும் பொலிசாரினால் தடைசெய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது.
- திருகோணமலையில் இடத்தை மாற்றுமாறு ஒழுங்கமைப்பாளர்களைப் பொலிசார் கட்டாயப்படுத்தினர்.
- சமய நிகழ்ச்சியொன்றின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் மதகுரு ஒருவரைப் பொலிசார் விசாரித்தனர்.
- முள்ளிவாய்க்காலில் இன்னொரு சமய நிகழ்ச்சியில் பங்கெடுப்பாளர்களும், ஊடக ஆளணியினரும் விசாரிக்கப்பட்டனர்.

- முள்ளிவாய்க்காலில் அயலிலுள்ள தேவாலயத்திற்கு மக்களை ஏற்றியிறக்கக்கூடாதென இரணைபாலையில் பஸ் உரிமையாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரையில் நிகழ்ச்சியொன்றின் பங்கெடுப்பாளர்களின் விபரங்கள் பொலிசாரினால் பெறப்பட்டன.
- யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சுற்றி அதிகரித்த எண்ணிக்கையிலான "புலனாய்வு அலுவலர்கள்" சமூகமளித்திருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.
- வட மாகாண சபையின் முதலமைச்சரின் தலைமையில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரயாணம் செய்தவர்கள், அவர்களது நடமாட்டம் தொடர்பில், அவர்களது வாகனங்கள் பொலிசாரினால் நிறுத்தப்பட்டதுடன், அவர்கள் விசாரணையும் செய்யப்பட்டனர்.

http://groundviews.org/2015/05/20/tamils-in-north-east-sri-lanka-remember-those-killed-despite-intimidation-and-surveillance/ (Last accessed on 2nd June 2015)

முள்ளிவாய்க்காலில் ஒரு நினைவு தினத்தை ஒழுங்குபடுத்துவதில் காரணகர்த்தாவான வண.எழில் ராஜேந்திரனின் உறுதிமொழி:
"எமது சமய ஆராதனையில் பங்கெடுப்பதற்கு முள்ளிவாய்க்காலில் இருந்து ஒருவருக்கும் துணிவிருக்கல்லை எனவும், இதற்கு காரணம் **சில உள்ளூர் மக்களைச் சி.ஐ.டி.இனர் சந்தித்து, வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக்கூடாது என அறிவுறுத்தினர்** எனவும், இதனால் எமது நிகழ்ச்சிக்கும் வரக்கூடாது என அவர்கள் அனுமானித்தார்கள் எனவும் கூறுவதற்கு என்னைப் பார்ப்பதற்காக ஒரு குடும்பம் வந்தது. சி.ஐ.டி. மற்றும் இராணுவப் புலனாய்வு ஆகியவற்றைச் சேர்ந்த அலுவலர்கள் வழமைக்கு மாறாக பிரசன்னமாகியிருப்பதன் காரணத்தினால் அவர்கள் பயப்படுவதனால் என்னை அங்கு வருமாறு மே 18 காலையில் தேவாலயத்திற்கு அருகில் உள்ள மக்கள் எனக்கு தொலைபேசி அழைப்பொன்றை விடுத்திருந்தனர். எம்முடன் வருமாறு சிங்கள மதகுருவை நான் கேட்கவேண்டியிருந்தது. பங்கு மதகுரு வந்திறங்கிய போது, அவரை அணுகிய சி.ஐ.டி. அலுவலர் ஒருவர், அவர் எதனை ஒழுங்குசெய்கிறார் எனக் கேட்டார். நாள் முழுவதும் காலையில் இருந்து மாலையில் ஆராதனை முடியும் வரை, **மரமொன்றின் கீழ் அமர்ந்திருந்த சாதாரண உடைகளிலான இருவர் சகல செயற்பாட்டினையும் பதிவுசெய்ததுடன், தமது மேலதிகாரிகளுக்கு தகவலையும் அனுப்பிக்கொண்டிருந்தனர்.**

இன்னொரு பங்கு மதகுருவிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்றைப் பெற்றேன். தேவாலயத்திற்கு துக்கம் அனுஷ்டிப்பவர்களைக் கொண்டு வருவதற்கான போக்குவரத்தை வழங்கிய பஸ் உரிமையாளருக்கு வந்த அனாமதேய அழைப்பொன்று ஒரு பஸ்சையும் ஓட்ட வேண்டாம் அல்லது எதிர்காலத்தில் அவர் பின்விளைவுகளுக்கு முகங்கொடுக்கவேண்டி வரும் என அறிவுறுத்தியதாக அவர் என்னிடம் தெரிவித்தார். **போக்குவரத்தை வழங்குவதற்காக ஏழு வேறு பஸ் உரிமையாளர்களை அதே பங்கு மதகுரு அணுகியதுடன், தமக்கு கிடைத்த அதேவாறான அனாமதேய தொலைபேசி அழைப்பின் காரணமாக அவ்வாறு செய்வதற்கு அவர்கள் அனைவரும் மறுத்தனர்.** நான் மாற்றுவழியிலான போக்குவரத்தொன்றை ஒழுங்கு செய்யவேண்டியிருந்தது. ஆனால், மக்கள் வரவில்லை. ஏனெனில் அனாமதேயத் தொலைபேசி அழைப்புக்களைப் பஸ் உரிமையாளர்கள் பெற்றனர் என்ற செய்தி எல்லா இடமும் பரவியிருந்தது. கடைசித் தருணம் வரை அத் தினத்தின் ஏனைய சகல துக்க அனுஷ்டான நிகழ்வுகள் போல், எமது சமய ஆராதனையும் தடுக்கப்படுமா அல்லது இல்லையா என நிச்சயமற்ற நிலையில் நாம் இருந்தோம். அயல்புறக் கிராமங்களில் இருந்து ஆராதனைக்காக ஐநூறு பேர் வந்த போது, இது போன்ற துயரத்தை சத்தத்துடன் வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு இடம் இருந்தமை இதுவே முதல் தடவை என நான் நினைக்கிறேன். இலங்கை நாட்டுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலொன்றாக விளங்காத நிலையில் **பெரிதுமே பெரும் துயரத்தில் இருந்த பெண்களைக் கொண்ட சகல பங்கெடுப்பாளர்களையும் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த அழையா விருந்தாளிகள் புகைப்படம் எடுத்தனர்.** முதல் தடவையாக, கூட்டத்தில் இருந்த மக்கள் தைரியத்துடன் இருந்ததுடன், தம்மைப் புகைப்படம் எடுத்த சாதாரண உடையிலான புலனாய்வு அலுவலர்களைப் புகைப்படமெடுத்தார்கள். ஆராதனையின் இறுதியில், அங்கு சமூகமளித்திருந்த **இரு வெளிநாட்டவர்களை** அவர்கள் ஏன் அங்கு நிற்கிறார்கள் எனக் கேட்டு பொலிசாரினால் விசாரிக்கப்பட்டனர்.
http://srilankabrief.org/2015/05/tamils-brave-harassment-threats-to-mourn-their-dead (Last accessed on 2nd June 2015)

## ஈ. மாணவர் செயற்பாட்டாளர்களின் அடக்குமுறை

### 17. போராட்டமொன்றைத் தொடர்ந்து இரு பல்கலைக்கழக மாணவர்கள் கைதாகினர்

ஏப்ரல் 29 அன்று பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் முன்னால், பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பிக்கு சம்மேளனப் பேரணியினதும், போராட்டத்தினதும் போது பொதுச் சொத்தைச் சேதமாக்கியது மற்றும் பொலிஸ் அலுவலர் ஒருவரைத் தாக்கியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் மீது, ஜயவர்தனபுர முகாமைத்துவ பீட மாணவரான சக்தி மாபாவிற்ற மற்றும் களனி சமூகவியல் பிரிவு மாணவரான விஷ்வ தனஞ்ஜய டீ சில்வா ஆகியோரை மே 11 வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹல்ஸ்டோப் நீதவான் மன்றம் கட்டளையிட்டது (அதே அறிக்கை ஏப்ரல் 30 மற்றும் மே 9 என்றவாறு திகதிகளை எடுத்துக்காட்டியது). பாடங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது அத்துடன் பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்வோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவது ஆகியனவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தே போராட்டம் நடத்தப்பட்டது. “அவர்களைப் பொலிஸ் அலுவலர்கள் துரத்திச் சென்று, கைது செய்தனர். அதன் பின்னர் அவர்களது நடமாடும் தொலைபேசிகளைப் பொலிசார் பறிமுதல் செய்ததுடன், அவற்றை இரகசியமாக பொலிஸ் நிலையமொன்றில் வைத்துள்ளனர். இந்த அரசாங்கம் நள்ளிரவில் மாணவர் ஒன்றியத் தலைவர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் வீடுகளுக்குச் சென்று பட்டதாரி மாணவர்களைத் தாக்கியுள்ளதுடன், அச்சுறுத்தியும் உள்ளது. மாபாவிற்றவும், டீ சில்வாவும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என நாம் கோருகின்றோம்” என பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் கூட்டமைப்பாளர் நஜித் இந்திக தெரிவித்தார்.
https://www.ceylontoday.lk/51-91934-news-detail-ugrads-agitate-call-for-release-of-two-in-remand.html (Last accessed on 2nd June 2015)

### 18. மாணவப் போராட்டக்காரர்களுக்கு ஒலிபெருக்கியொன்றை வழங்கியமைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டார்

பல்கலைக்கழக மாணவப் பேரணியொன்றின் அங்கமாக தனது முச்சக்கர வண்டியில் ஒலிபெருக்கியொன்றைக் கொண்டு சென்றதிற்காக கொழும்பு பிரதம நீதவான் ஜிஹான் பிலபிற்றியவினால் சுகத் பிரசன்ன லியனகே என்ற பெயரிலான சாரதியொருவர் மே 11 அன்று விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவின் முன்னால் மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அவர் மே 25 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
http://www.lankadeepa.lk/index.php/articles/315830 (Last accessed on 2nd June 2015)

## உ. எதிர்தரப்பு அரசியல் கட்சிகளின் அடக்குமுறை

### 19. நீதிமன்றத்தினால் வரவழைக்கப்பட்ட போராட்டக்காரர்கள்

நீதிமன்றக் கட்டளைகளை மீறி ஏப்ரல் 23 அன்று இலஞ்சத்தினதும் அல்லது ஊழலினதும் சார்த்துரைகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவுக்கு எதிரில் போராட்டமொன்றை நடத்தியதற்காக முன்னணிவாய்ந்த ஐ.பொ.மு. கூ. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட 27 பேர் மீது ஏப்ரல் 24 அன்று கொழும்பு பிரதம நீதவான் ஜிஹான் பிலபிற்றிய முன்னறிவிப்பினை வழங்கினார். அதே தினத்தன்று அவர்கள் சகலருக்கும் பிணை வழங்கப்பட்டது.
http://www.sundayobserver.lk/2015/04/26/new03.asp (Last accessed on 2nd June 2015)